# NEWS LETTER


## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


Vivekananda Community Foundation




## உயர்தரப்பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பில் விழிப்புணர்வை







மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயாலயத்தில் உயர்தரப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியால் நடாத்தப்பட்டது. இடம்பெற்றது.

இதன்போது உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். மேலும் அவர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பிலான விளிப்புணர்வை இதன்போது பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அமைய பெற்றுள்ளமை குறிப்பிடதக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேசத்தில் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் புகலிடம் சமூதாய கல்லூரியில் வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அடிப்படை கணணிப் பயிற்சியானது 2025.06.20 வெள்ளிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்பட்டது.

12 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சியில் இக்கால கட்டத்தில் கணணி அறிவின் முக்கியத்துவம் பற்றியும் எதிர்கால உலகில் கணணியின் சாதக மற்றும் பாதகமான விளைவுகள் பற்றி தெளிவூட்டப்பட்டதோடு மாணவர்களுக்கான அடிப்படை கணணி பற்றிய செயன்முறை பயிற்சிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடதக்கவிடயமாகும்.





**Support for 20 Students in Puhalidam**

**per Pack – LKR 3,500**






மட்/தாழங்குடா விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 55 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான விசேட செயலமர்வானது எமது புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றதோடு மாணவர்கள் தமது அன்றாட வாழ்கையில் எதிர்நோக்க கூடிய பிரச்சினைகளை அடையாளங்கண்டு சரியான முறையில் அதனை தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் ஒரு பிரச்சினையை சரியான முறையில் அணுகுவதன் மூலம் அதில் இருந்து வெளிவருவதற்கான திறன்கள் என்பன செயற்பாடுகளின் மூலம் தெளிவூட்டப்பட்டது, மற்றும் அவர்களின் இலக்கினை சரியான முறையில் அடையாளப்படுத்துவது மற்றும் எதிர்கால தொழிநுட்ப உலகிற்கு ஏற்றார் போல் தமது தொழிற்பாதையினை தற்போது இருந்தே திட்டமிடுவதற்காக எதிர்கால உலகில் அதிக வேலைவாய்ப்பக்களை ஏற்படுத்தி தொழிநுட்ப உலகினை ஆளப்போகும் தொழில் வாய்ப்புக்களுக்கான பாடநெறிகளை தமது பாடத்தெரிவுகளில் தெரிவசெய்வதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமான முறையில் அறிக்கைகளின் உதவியுடன் தெளிவூட்டப்பட்டது.

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் பயிற்சியை பூர்த்தி செய்கின்ற மாணவர்களினிடையே வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தலில் ஆர்வம் உள்ளவர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கான விசேட தெளிவூட்டல் செயலமர்வினை Amirda Resourse Hub உறுப்பினரும், மலிபன் கம்பெனியின் வடகிழக்கிற்கான சந்தைப்படுத்தல் சிரேஸ்ட உத்தியோகத்தருமான திரு.கு.புவதாஸ் அவர்கள் வழங்கியதுடன் ஆர்வம் உள்ளவர்களை தெரிவு தெரிவு செய்யும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகுதிகளை எவ்வாறு வளர்த்தக்கொள்வது மற்றும் எவ்வாறான அடிப்படை தகுதிகள் தொழிவாய்ப்பொன்றை பெறுவதற்கு அவசியம் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ள கூடியவாறு அமைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.





விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்காக போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அமிர்தா நிறுவனத்தால் ஒழுங்குசெய்யப்பட்டு இடம்பெற்றதோடு இந் நிகழ்வில் அமிர்தா Hub Resource Person, சமூக சீர்திருத்த அதிகாரி மூத்த ஆலோசகர் (NISD) திரு.மு.புவநேந்திரன் அவர்கள் வளவாளராகக் கலந்துகொண்டு தெளிவுபடுத்தல்களை வழங்கினார்.

இதன்போது கட்டிளமை பருவத்தில் உள்ள இளைஞர் யுவதிகளை திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சமூக சீர்கேடான செயற்பாடுகள் தொடர்பிலும் அதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தியதுடன் மாணவர்களுக்காக பல ஆலோசனைகளை வழங்கியிருந்தார்.





# TOP NEWS !

## VCOT சமுதாயக் கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




பின்தள்ளப்பட்ட பிரதேசங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழான எல்லைப் பிரதேசங்களை மையப்படுத்தி சமுதாயக் கல்லூரிகளை உருவாக்கி அப்பிரதேசத்தின் மாணவர்களுக்கான Office Managment & IT மற்றும் ஆங்கிலப் பயிற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதனடிப்படையில் மனித நேய நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் கரடியனாறு மனித நேயம் சமுதாயக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கரடியனாறு சமுதாயக் கல்லூரியில் இடம்பெற்றது.

எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சஜீவன், கரடியனாறு இந்து வித்தியாலய அதிபர் திரு.உதயச்சந்திரன், உன்னிச்சை 8ம் மைல் கல் பாடசாலை அதிபர் திரு.விநாயகமூர்த்தி, மரப்பாலம் சீயோன் சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகஸ்தர்கள் உள்ளடங்கலாக விவேகானந்த குடும்பத்தின் சேவையாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.








Office management & IT மற்றும் ஆங்கிலப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு AU Lanka நிறுவனத்துடன் இணைந்து சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவ்வாறே, மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர்கள் கல்வித்துறையில் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டியும் தற்போது பதவியுயர்வு பெற்று வடமாகாணக் கல்விப்பணிப்பாளராக பதவியேற்கவிருப்பதற்காகவும் எமது விவேகானந்த குடும்பத்தினரால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பானதாகும்.

VCOT சமுதாய கல்லூரி முறையிலான இவ்வாறான செயற்பாடுகளை தேவைப்பாடுடைய பிரதேசங்களில் முன்னெடுப்பதன் மூலம் இளைஞர்கள், யுவதிகளை அடையாளப்படுத்துவதோடு மட்டுமன்றி அவர்களின் எதிர்காலத்திற்கான சிறந்த வழிகாட்டலாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியவளம் மற்றும் பௌதீக வளம் குறைந்து காணப்படும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துடன் இணைந்த இந்த சேவை தொடர்ச்சியாக மாணவர்களிற்கான வாழ்வியல் வழிகாட்டலுடன் அவர்களிற்கு தேவையான தொழில்பயிசிகள் மற்றும் அதற்கான இணைப்புக்களை மேற்கொள்வதுடன் தேவைக்கேற்ற அடிப்படையான பயிற்சிகளை பயிற்சி பட்டறைகளை தொடர்ந்து வழங்கவிருக்கின்றது.

















# VCOT சமுதாயக் கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

விவேகானந்த குடும்பத்தின் நிறுவனங்களின் இவ்வருடத்திற்கான இரண்டாவது காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வானது எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது.








விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா உள்ளிட்ட எமது நிறுவனங்களின் அனைத்து சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டதோடு ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரிய காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




இக் காலாண்டுப் பகுதியில் எமது செயற்பாடுகள், அடைவு மட்டங்கள், ஒவ்வொரு அமைப்புக்களும் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டதோடு எமது எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**